## தனிநபர் வியாபாரப் பெயரினைப் பதிவு செய்வதற்கான ஆலோசனைகள்

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன் பின்வரும் வழிமுறைகளை கவனமாகப் படிக்கவும்

## விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்வதற்கான ஆலோசனைகளை

1. 2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மேல் மாகாணத்தில் வியாபார மற்றும் கூட்டுத்தாபனமாக்கப்படாத வர்த்தக நிறுவனங்களின் வியாபார பெயர்கள் நியதிச்சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், தடைசெய்யப்பட்ட வணிகப் பெயர்களைப் பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்.
2. இது ஒரு வர்த்தகம், இறக்குமதி, ஏற்றுமதி அல்லது உற்பத்தியாக இருந்தால், வர்த்தகம் செய்யப்படும் , இறக்குமதி, ஏற்றுமதி அல்லது உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தொகுதி மற்றும் வகையை தெளிவாகக் குறிப்பிடவும்.
3. வியாபாரம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் அல்லது அதிகபட்சம் 30 நாட்கள் வரை அனுமதிக்கப்பட்டமேலதிக காலத்திற்குள் வியாபாரப் பெயரினை பதிவு செய்வதற்காக முன்வைக்க வேண்டும்.
4. முதலெழுத்துக் குறிக்கும் குடும்பப் பெயருடன் முழுப் பெயரினைக் குறிப்பிடவும். பொதுவாகப் பயன்படுத்தும் பெயருக்கு மேலதிகமாக வேறு பெயர்கள் காணப்பட்டால் அதனை ( முழுமையாக) திருமணமான பெண்கள் தொடர்பான விடத்து திருமணத்திற்கு முன்னரான பெய ரை (முழுமையாக) குறிப்பிடவும்
5. விண்ணப்பமானது வணிக உரிமையாளரின் தனிப்பட்ட பெயரில் கையொப்பமிடப்பட வேண்டுமே தவிர வணிகத்தின் பெயரில் அல்ல.

## தனிநபர் வியாபாரப் பெயரினைப் பதிவு செய்வதற்காகப்பெற்றுக் கொள்ள வேண்டிய ஆவணங்கள்.

I. பீஎன்ஆர்-01 படிவம்

II. உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையினதோ செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவச்சீட்டினதோ செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்தினதோ உண்மைப் பிரதி.

III. வியாபாரம் நடைபெற்று வருகிறது என்பதற்கு கிராம அலுவலரின் அறிக்கை (இதில் பிரதேச செயலரளர் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.)

IV. வியாபார நிலையம் தொடர்பாக உரிமையை மாற்றுவதை உறுதிப்படுத்தும் உறுதியின் அல்லது குத்தகை ஒப்பந்தத்தின் நொத்தாரிசு உறுதிப்படுத்திய பிரதி

வியாபார நிலயத்தின் உரிமையானது வேறு உறுதியின் மூலம் வேறொரு தரப்பினருக்கு உரிமை மாற்றப்பட்டிருந்தால் , மேற்கூறிய ஆவணத்திற்கு மேலதிகமாக, விடயத்திற்குரிய சொத்தில் உரிமையுள்ள தரப்பினர் வணிகப் பெயரைப் பதிவு செய்ய சட்டப்பூர்வ அனுமதியை வழங்குகிறார்கள் அல்லது வழங்கியுள்ளனர் என்று சத்தியப் பிரமாணக் கடிதம் அல்லது உறுதியுரைப் பத்திரம்

V. பதிவாளரால் சந்தர்ப்பத்திற்கேற்ப அழைக்கக் கூடிய அத்தகைய பிற ஆவணங்கள், ஏதேனும் இருந்தால் அவை